# ஸ்ரீ கோதாசார்யன்




# யானை வழக்கின் விவரம் என்ன?

காஞ்சிபுரம் வரதராஜஸ்வாமி கோயிலில் தென்கலையார் வடகலையார் இருவருக்குமே பாத்யதைகள் இருந்து வருகின்றன. திவ்யப்ரபந்த கோஷ்டி தென்கலையாருடைய முராசாகவும் வேதபாராயண ஸ்தோத்ர பாட கோஷ்டி வடகலை தாதாசாரியர்களுடைய மிராசாகவும் இருந்து வருகிறது. நம்மாழ்வார், மதுரகவிகள், நாதமுனிகள், திருக்கச்சி நம்பி, மணவாள மாமுனிகள் முதலானோர் தென்கலைத் திருமணுடனும், மற்ற ஆழ்வார்கள், ஸ்ரீராமானுஜர், வேதாந்த தேசிகர் முதலானோர் வடகலைத் திருமணுடனும் எழுந்தருளியிருக்கின்றனர். இப்படி பல கால வழக்கமாகவே தென்கலை வடகலை இரண்டும் சேர்ந்தே இருந்து வருகின்றன அப்படிப்பட்ட தென்கலைத் திருமண்களில் ஒன்றுதான் இந்தக் கோயிலின் உயிருள்ள யானையின் நெற்றியில் இடும் திருமண் காப்பும். ஆனால் இத்திருமணை மாற்றி வடகலைத் திருமண் போட முயற்சி நடந்தது, 1850ல். இதைத் தடுக்க தென்கலையார் வழக்கு தொடர, கோர்டில் யானைக்கு அநாதி கால வழக்கப்படி தென்கலைத் திருமணே போடவேண்டும் என்று தீர்ப்பாகியது .1940ம் வருஷம் திருவாங்கூர் மகாராஜா வடகலைத் திருமண் போடவேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு யானை கோயிலுக்கு வழங்கினர். இதை ஆட்சேபித்து எண்டோமெண்டு போர்டில் தென்கலையார் வழக்கு தொடர்ந்தனர். ஆனால் அறநிலையத்துறை, திருவாங்கூர் மகாராஜா அளித்த யானைக்குமட்டும் அவர் விருப்பப்படியே வடகலைத் திருமண்போட உத்தரவிட்டது அந்த யானை 1965ல் இறந்துவிட்டது. அப்போது ஸ்ரீசிங்கம் செட்டி யதீந்த்ருலு செட்டி சாரிடியார் அநாதிகால வழக்கப்படி தென்கலைத் திருமண் போட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு யானையை வழங்க முன்வந்தனர். இதை தேவஸ்தானத்தார் நிராகரித்துவிட்டு ஸ்ரீ மதாண்டவன் வழங்கிய (தற்போது இறந்த) யானையை ஏற்றுக் கொண்டு அதற்கு வடகலைத் திருமணும் சாற்றினர். இதை எதிர்த்து தென்கலையார் வழக்கு தொடர்ந்து கோயில் யானைக்குத் தென்கலைத் திருமண் போடவேண்டும் என்ற தீர்ப்பையும் பெற்றனர். விடுவார்

(ராப்பர் 3ம் பக்கம் பார்க்க)

# கீதாசார்யன்-15

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।"

தொகுதி 2 | ஸித்தார்த்தி௵ | மார்கழி௴ | டிச 79 | பகுதி 3




ஆசிரியர்

**M. A. வேங்கடகிருஷ்ணன், M.A.**

P. T. சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்கு மாட வீதி,
திருவல்லிக்கேணி : : சென்னை-600 005

ஆண்டுச் சந்தா ரூ. 10

விலை ரூ. 1.00

# ஸ்ரீமத் பகவத்கீதை

**தஸ்மாந்நார்ஹா வயம்ஹந்தும் தார்த்தராஷ்ட்ராந் ஸபாந்தவாந்**
**ஸ்வஜநம் ஹி கதம் ஹத்வா ஸுகிந꞉ ஸ்யாம மாதவ (37)**

ஆகவே, துரியோதனாதியர்களை உறவினர்களோடு கொல்வதற்கு வல்லோமல்லோம் மாதவனே! உறவினரைக் கொன்று எப்படி சுகமுடையராவோம்?

**யத்யப்யேதே ந பச்யந்தி லோபோபஹத சேதஸ :**
**குலக்ஷயக்ருதம் தோஷம் மித்ரத்ரோஹேச பாதகம் (38)**

இந்த துரியோதனாதியர், ராஜ்யத்தின் மேலுள்ள பேராசையால், குலத்தினழிவினால் உண்டாகும் பாவத்தையும், நண்பர்களுக்கு துரோகம் செய்வதால் உண்டாகும் பாவத்தையும் காணவில்லை. (ஆயினும்)

**கதம் ந ஜ்ஞேயமஸ்மாபி : பாபாதஸ்மாந்நிவர்திதும்**
**குலக்ஷயக்ருதம் தோஷம் ப்ரபச்யத்பிர் ஜநார்தந (39)**

குலத்தின் அழிவினால் உண்டாகும் தீங்கை நன்கு அறிந்துள்ள எங்களால் இப்பாபங்களிலிருந்து மீள்வதற்கு எப்படி அறியாமல் இருக்க முடியும்

**குலக்ஷயே ப்ரணச்யந்தி குலதர்மா : ஸநாதநா :**
**தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நமதர்மோபி பவத்யுத (40)**

குலத்தின் அழிவு உண்டானால், தொன்மையான குலதர்மங்கள் அழிகின்றன. தர்மங்கள் அழிந்தால் குலம்முழுவதை [illegible]ர்மம் சூழ்ந்து வெற்றி கொள்கிறது.

---

அட்டையில் : ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள்
Block by the courtesy of Sri D. Aravamudan.

# மார்கழி

**பார்த்தன் :** கண்ணா இந்த மாதம் நாம் எந்த திவ்ய தேசத்திற்குச் செல்லலாம்?

**கண்ணன் :** இந்த மாதம் நாம் எங்கும் செல்லப்போவதில்லை. சென்னையிலேயே இருக்கப் போகிறோம்.

**பார்த்தன் :** ஏன் கண்ணா? மார்கழி மாதம் நல்ல காரியங்களுக்கு ஏற்ற மாதமல்ல—பீடை மாதம் என்று சிலர் கூறுகிறார்களே! அதனால்தான் இப்படிச் சொல்லுகிறாயோ?

**கண்ணன் :** அப்படியல்ல பார்த்தா! கீதாசார்யன் பகவத்கீதையில் "மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்" (மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்) என்று கூறியிருக்கிறான். எனவே பகவான் மிகவும் உகந்தமாதமிது. எனவே இம்மாதத்தில் எப்போதும் நாம் அவனைப் பற்றியே நினைக்க வேண்டும். அதனால்தான் பெரியோர்கள் இம்மாதத்தில் கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் கூடச் செய்யாமல் அவனையே நினைக்கும்படி நியமித்திருக்கிறார்கள். எனவே இது பீடை மாதமல்ல—பீடு உடைய மாதமாகும்.

**பார்த்தன் :** கண்ணா! மிகவும் பொருத்தமான விளக்கமாக இருக்கிறதே. மார்கழி மாதத்தில் ஏன் சுபகாரியங்கள் செய்வதில்லை என்ற என் சந்தேகத்திற்கு இன்றுதான் விடை கிடைத்தது.

**கண்ணன் :** ஆண்டாளும் இக்காரணத்தினால்தான் பாவை நோன்பு நோற்பதற்கு மார்கழி மாதத்தைத் தேர்ந்தெடுத்தாள் போலும். இம் மாதத்தில் நாம் எம்பெருமானைப் பற்றியே சிந்தனை செய்வதற்காகவே நாடெங்கிலும் திருப்பாவை உபந்யாசங்கள் நடைபெறுகின்றன. எம்பெருமானாகிற சமுத்ரத்தில் இறங்கி அவனுடைய கல்யாண குணங்களாகிற நல்முத்துக்களையும் ரத்தினங்களையும் நமக்காக எடுத்துத் தருகிறார்கள் வித்வான்கள். எனவே நாம் இம்மாதம் எந்த திவ்யதேசத்திற்கும் செல்லாமல் சென்னை மாநகரிலேயே தங்கி திருப்பாவை உபந்யாசங்களை ஒரு நாளும் தவறாமல் கேட்டு, திருவருள் பெற்று இன்புறுவோம்.

# வேதமனைத்துக்கும் வித்து

## குண்டலம் R. திருமலாசாரியர்

ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை முப்பது பாட்டும் "வேதமனைத்துக்கும் வித்தாகும்" என்கிறார் வேதப்பிரான் பட்டர் எனும் பெரியார். எண்ணற்றவை என்று கூறப்படும் வேதங்களுக்கு திருப்பாவை எனும் சிறு பாமாலை எப்படி வித்தாகிறது என்பதைச் சிறிது ஆராய்வோம், வாருங்கள்.

வேதங்களும், ஸ்ம்ருதிகளும், இதிகாசங்களும், புராணங்களும் மூன்றே விஷயங்களைத்தான் தெரிவிக்கின்றன. அவை தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என்பன. ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்பது தத்வம். நாம் அடையவேண்டிய மேலான பலன் மோக்ஷமே; அது புருஷார்த்தம். அதை அடைவதற்கு நாம் ஸ்ரீமந் நாராயணனிடம் செய்யும் பக்தியே ஹிதமாகும்.

ப்ரஸ்தானத்ரயம் என்று கொண்டாடப்படும் உபநிஷத்துக்கள், ப்ரஹ்மஸூத்ரம், பகவத் கீதை ஆகியவையும் இம்மூன்றையே சுருங்க விளக்குகின்றன. எனினும் இவை யாவும் ஸம்ஸ்க்ருதத்திலேயே அமைந்துளதால் பாமரர்க்குத் தெளிவாக்கும் வண்ணம் அமைந்திலது. அக்குறையைப் போக்கவே ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்கள் அவதரித்தன. அதிலும் மிகச்சுருக்கமாக முப்பதே பாசுரங்களில் பண்டித பாமரர் வாசியற இனம் மதம் போன்ற பல வேற்றுமைகளைக் கடந்து எல்லோரும் உணரலாம்படி எளியதமிழில் அமைந்துள்ளது திருப்பாவை எனும் பாமாலை.

திருப்பாவை எப்படி முப்பெரும் பொருள்களை (தத்வ த்ரயத்தை) தெரிவிக்கிறது என்று இனி பார்ப்போம். முதல் பாட்டிலேயே **"நாராயணனே நமக்கே பறை தருவான்"** என்று

(தொடர்ச்சி 41ம் பக்கம் பார்க்க)

# ஆண்டாள் தமிழை ஆண்டாள்

தமிழிலே காதல் இலக்கியங்கள் ஏராளம். அவற்றில் மனிதனைக் காதலனாக வரிக்கும் இலக்கியங்கள் பல.

அரசனைக் காதலனுக்கிக் காட்டும் இலக்கியங்கள் சில

அவையெல்லாம் ஆடவனைப் பெண் காதலிக்கும் இலக்கியங்கள்.

ஆனால், ஆண்மையில் பெண்மை கண்டு, அதை நாயகி 'பாவ'மாகக் கொண்டு, இறைவனை நாயகனாக வரிக்கும் சமய இலக்கியங்கள் தனிச்சுவை வாய்ந்தவை.

ஆணைப் பெண் காதலிக்கும்போது வருகின்ற உருக்கத்தை விட, ஆணே பெண்ணாகும் உருவகத்தில் உருக்கம் அதிகம்

காதலுக்குச் சொல்லப்படும் இலக்கணங்களையெல்லாம் அந்த ஆணுகப் பிறந்த பெண் உருவங்கள் எப்படி எப்படிக் கையாளுகின்றன!

---

**கவியரசு கண்ணதாசன்**

---

அப்படிக் கையாளும்போது, நமது தமிழ் மொழிக்கு இந்து சமயம் வழங்கியுள்ள வார்த்தைகள் தாம் எத்தனை!

அவற்றில் 'நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை'ப் புதிய தமிழ்ச் சொற்களின் அகராதி என்றே அழைக்கலாம்.

பெண்மையின் காதல் அவஸ்தையைச் சித்தரிக்கும் முத்தொள்ளாயிரப் பாடல்களோ, மற்றச் சங்க காலத்து அக நூல்களோ, ஏன், கம்பராமாயணமோகூடக் காட்டாத வாண வேடிக்கைகளைப் பிரபந்தம் காட்டுகிறது

தூதும் மடலும், உலாவும் பிரபந்தமும் தமிழுக்குப் புதியவையல்ல.

ஆனால், பத்திச் சுவையை இலக்கியச் சுவையாக்கித் தமிழ் நயமும், ஓசை நயமும் பொருள் நயமும் கலந்து, படிப்பவர்களுக்குத் தெய்விக உணர்ச்சியையும் லௌகிக உணர்ச்சியையும் ஒன்றாக உண்டாக்குவது திவ்யப் பிரபந்தம்.

இதை, தமிழுக்கு இந்துமதம் செய்த சேவை, என்று சொல்வதிலே தவறென்ன?

தமிழ் அகத்துறையில் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற குணங்களும், விரக வேதனையால் அங்கங்களில் ஏற்படும் மாறுதல்களும், விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

தமிழ் படிக்கும் ஒருவன் எல்லாத் தமிழ் இலக்கியங்களிலும் இந்த ஒரே ஒரு விஷயம் வேறுவேறு விதமாகச் சொல்லப்படுவதை அறிவான்.

அகநூல் விதிப்படி, நாணிக் கண் புதைத்தல், நெஞ்சோடு கிளத்தல் என்றெல்லாம் பகுத்துக்கொண்டு எழுதப்பட்ட நூல்கள் உண்டு.

தனித்தனிப் பாடல்களாக விரக வேதனையின் பல்வேறு வகையைக் காட்டும் பாடல்களும் உண்டு.

அவற்றிலெல்லாம் காதல் என்பது கற்பியலிலும் முடியும்; இல்லை, களவியலிலும் முடியும்!

அந்த இலக்கியத்தில் காதலை மிகைபடச் சித்தரிப்பதைத் தவிர வேறு நோக்கம் கிடையாது.

ஆனால், சமய இலக்கியத்தில் காதலுக்கும் பக்தியே மூல நோக்கமாகும்.

தேனிலே மருந்து குழைப்பதுபோல், காதலிலே பக்தியைக் குழைத்தால், சராசரி மனிதனை அது வசப்படுத்திடுமென்றே சமயஇலக்கியங்கள் அவ்வாறே செய்தன.

நாமும் வெறும் நமாவளிகளைவிட இந்தச் சுவையையே பெரிதும் விரும்புகிறோம்.

உலகத்தில் எல்லாமே இறைவனுடைய இயக்கம்;

ஆண் – பெண் உறவு இதற்கு விதிவிலக்கல்ல.

அந்தச் சுவைமிகைபடப் போயினும் தவறில்லை.

அது ஞானியை இறைவனிடமும், நல்ல மனிதனை மனைவியிடமுமே சேர்க்கிறது.

அந்த வகையில் பிரபந்தம் காட்டும் திருமொழிகள் அளவிடமுடியாத உணர்ச்சிக் களஞ்சியங்கள்.

நாச்சியார் திருமொழியில் பல தமிழ் வார்த்தைகள் எனக்கு வியப்பளித்தன.

ஆண்டாள் என்றொரு பெண்பாற் பிறப்பு இல்லை என்றும் அது பெரியாழ்வார் தமக்கே கற்பித்துக்கொண்ட பெண்மை என்றும் சிலர் கூறுவர்.

ஆனால், வடக்கே ஒரு மீராபாயைப் பார்க்கும் தமிழனுக்கு, தெற்கே ஓர் ஆண்டாளும் இருந்திருக்கலாம் என்ற நம்பிக்கை வரும்.

அது எப்படியாயினும், நமக்குக் கிடைத்திருப்பது ஓர் அரிய கலைச் செல்வம்.

சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமியரை, நந்த கோபாலன் குமரனிடம், ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ் சிங்கத்திடம், கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தானிடம் அழைத்துச் செல்வது, தமிழில் அற்புதமான பாவைக் கூத்து.

'நாம் நெய்யுண்ணோம் பாலுண்ணோம், மையிட்டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம்' என்கிறார் நாச்சியார்.

'அவன் ஓங்கி உலகளந்த உத்தமன்!

ஆகா! எவ்வளவு அற்புதமான உருவகம்!

அங்கு நீங்காத செல்வமாக நிற்பன எவை தெரியுமா?

வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களாம்'

பசுவுக்கு 'வள்ளல்' என்ற பட்டத்தை பக்தியின்றி எது சூட்டும்?

ஓர் உருவகத்தைக் கேளுங்கள். அதுவும் விஞ்ஞான உண்மை.

மழை பெய்வதை நாச்சியார் கூறுகிறார்.

"ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கருத்து
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய்,'

—கடலிலே புகுந்து நீரை எடுத்து ஊழி முதல்வன் உருவம் போல் உடம்பு கருத்து, மேகமாகி, அந்தப் பத்மநாபன் கையில் ஆழிபோல் மின்னி, சங்குபோல் முழக்கி, வில்லிலிருந்து பொழிந்த அம்பு மழை போல் மழை பெய்யக் கோருகிறார் நாச்சியார்.

அந்தக் கண்ணன் மாயன், வடமதுரை மைந்தன்.

'விங்குநீர் இலங்கை' என்றானே கம்பன், இங்கே நாச்சியார் 'தூயபெருநீர் யமுனைத் துறைவன் என்கிறார்.

'தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனே!' எவ்வளவு புதிய சொல்லாட்சி!

(தொடரும்)

சிறுகதை

# தாகசாந்தி

**பேராசிரியர் இரா. அரங்கராசன் M.A., B.T**

பங்குனி மாதம். ஆதிப்ரஹ்மோத்ஸவம் நடந்துகொண்டிருக்கிறது. திருவரங்க மாநகரின் ஸப்தப்ராகாரங்களும் ஜன நெரிசலால் நெளிந்துகொண்டிருக்கின்றன. நம்பெருமாள் இரண்டாவது திருநாளில் ஜீயர்புரத்திற்குப் பல்லக்கில் எழுந்தருளி அம்மையார் தண்ணீர்ப் பந்தலுக்கு விஜயம்செய்த போதும் சரி, ஆருவது திருநாளில் உறையூர் எழுந்தருளிச் சோழகுல வல்லியோடு ஏகாஸநத்தில் எழுந்தருளின போதும் சரி, ஒரு ஜன ஸமுத்ரமே நம்பெருமாளைப் பின் தொடர்ந்தது.

ஒன்பதாம் திருநாளில் அடியார்களுக்கு ஒரு கொண்டாட்டம்! அன்று பங்குனி உத்தரம். நம்பெருமாள் ஸ்ரீரங்க நாச்சியார் சந்நிதி வாசலில் உள்ளே நுழையமுடியாதபடி பரிதாபமாகக் காத்துக்கொண்டிருந்தது; நம்பெருமாளுடன் ஊடல் கொண்டிருந்த ஸ்ரீரங்கநாச்சியாரின் ஏச்சுக்களும் பேச்சுக்களும் ஒரே கோலாஹலமாக நடந்தது; இறுதியில் நம்மாழ்வார் எழுந்தருளி சமாதானம் செய்து வைத்தது — அத்தனையும் பக்த கோடிகளுக்கு உற்சாகத்தை வளர்த்து விட்டன.

திருவரங்கரின் இந்த மஹோத்ஸவத்தைத் தான் கண்டு களிக்க ஒரு ஜீவன் எழுநூறு காதம் கடந்து வந்தது. ஆம், வடக்கே வாரணாசி க்ஷேத்ரத்திலிருந்து — கங்கைக் கரையிலிருந்து—அது வனவனாந்தரங்களையும் மலைகளையும் பள்ளங்களையும் நதிகளையும் தாண்டி, கொடியவாய் விலங்குகளையும் கொலைத் தொழில் செய்யும் திருடர்களையும் தப்பி எப்படியோ பல மாதங்கள் நடையாக நடந்து திருவரங்க மாநகரை எட்டி விட்டது.

அப்போதுதான் ப்ரஹ்மோத்ஸவம் பூர்த்தியாகி தீர்த்த வாரி ஆகப்;போகிற சமயம்!

தீர்த்தவாரி உத்ஸவத்திற்கான ஏற்பாடுகளைக்கண்காணிப் பதில் முதலியாண்டான் ஈடுபட்டிருந்தார். ஸ்ரீஸேனாபதி துரந் தரராய் குறட்டிலேயிருந்து கோயில் ஸ்ரீகார்யம் ஆராயும் அந்தப் பெரிய பொறுப்பு ஸ்ரீராமாநுஜரால் அவருக்கு அளிக் கப் பட்டிருந்தது. சிறந்த நிர்வாகி என்று பலராலும் புகழப் பட்ட அவர் ஸ்ரீராமாநுஜரின் திவ்யாஜ்ஞையைப் பரிபாலிப் பதையே தமது தலையான கடமையாகக்கொண்டு பணியாற்றி வந்தார். ஸ்ரீராமாஜர் அப்போது கூரத்தாழ்வானுடன் திக் விஜய யாத்ரையாக வடக்கே புறப்பட்டுச் சென்றிருந்தார். அதனாலும் முதலியாண்டானுக்குக் கோயில் நிர்வாஹப் பொறுப்புக்கள் மேலும் கூடியிருந்தன.

நம்பெருமாள் தோளுக்கினியானில் புறப்பட்டுவிட்டார்! ராஜமஹேந்த்ரன் திருச்சுற்று, அகளங்கன் திருச்சுற்றுக்களில் ஒய்யார நடைபோட்டு ஆலிநாடன் திருச்சுற்றிலுள்ள சந்த்ர புஷ்கரிணி நோக்கி நம்பெருமாள் எழுந்தருளினார். நம்பெரு மாள் திருப்பல்லக்கின் பின்வரிசையில் ஆரியபடர்கள் உருவின கத்தியுடன் காவலாகப் பின்தொடர்ந்து வந்தனர்.

முதலியாண்டான் நம்பெருமாளின் நடையழகில் தம் மனத்தையே பறிகொடுத்தார். ஸ்ரீராமாநுஜரைப் பிரிந்திருந்த அவருக்கு, நம்பெருமாள் நடையழகே ஓரளவு சாந்தியளித்து வந்தது. நடையில் மெய்ம்மறந்த அவர் அரங்கனின் முகதரிச னத்திற்காக நிமிர்ந்தார்.

திருவரங்கனின் திருமுகத்தைப் பார்த்ததும் முதலியாண் டான் நெஞ்சில் இனந்தெரியாத பயம் சூழ்ந்தது. விண்ணுல கும் மண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற செங்கோ லுடைய திருவரங்கச் செல்வனாரின் திருமுகத்தில் கவலையும்

வெறுப்பும் சிறிது கோபமும் சேர்ந்து ஜ்வலிப்பதை முதலி யாண்டான் ஒருவரே காணமுடிந்தது. நம்பெருமாள் திருவுள் ளத்துக்கு விரோதமாக யாரேனும் நடந்துகொண்டார்களோ? முதலியாண்டான் அடிமனத்தில் இந்தக் கேள்விக்குறி விசுவ ரூபம் எடுத்தது. கைங்கர்யபரர்களையெல்லாம் அழைத்து விசாரித்தார். விண்ணப்பம் செய்வார்களில் திருவரங்கப் பெருமாள் அரையர் இன்னும் வந்து சேரவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு அவரை அழைத்துவரத் தழையிடுவாருக்கு ஆணை பிறப்பித்தார். செந்தமிழ் பாடுவார் வீதிநோக்கி அவர் கள் விரைந்தார்கள்.

திருவரங்கன் கைங்கரியங்கள் உரிய நாழிகையில் வழுவி தவறுமல் நடக்க வேண்டும். ராஜாதிராஜன் அல்லவா! மேலும் பத்துக் கொத்திலுள்ளாரும் தாமதமில்லாமல் நம் பெருமாள் சந்நிதியில் புறப்பாட்டிற்குமுன் ஸந்நத்தராயிருக்க வேண்டும். திருவரங்கப் பெருமாள் அரையர் மட்டும் அன்று அதுவரை வராதது எல்லாருக்குமே புதிராகிவிட்டது.

விண்ணப்பஞ் செய்வார்களிடையே தலைவராகக் கொண் டாடப் பட்டவர் திருவரங்கப் பெருமாள் அரையர். ஆளவந் தாரின் திருக்குமாரரான அவர், ஆடல்பாடல்களிலே வல்லவர். வேஷங்கள் புனைந்து கொண்டு பகல் பத்துத் திருநாட்களில் நாடகம் நடிப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அதனால் அவரைக் 'கோயிலுடைய பெருமாள் அரையர்' என்று திரு வரங்கரே விருது அளித்துப் பாராட்டியிருந்தார்.

அவர் ஏன் வரவில்லை?

அஷ்டாதச வாத்யங்களும் முழங்க நம்பெருமாள் திருப் பல்லக்கில் ஆலிநாடன் வீதியில் மெதுவாக நகர்ந்துகொண்டி ருந்தார்.

அவருடைய நடையில் ஒரு சோர்வு, ஒரு தயக்கம்!

அத்தனைக்கும் மேல் யாரோ ஒருவரின் எதிர்பார்ப்பு!

அதோ! அரையர் வந்துவிட்டார். ஆயிரமாயிரம் கண்கள் அரையரைச் சூழ்ந்து கொண்டன.

அரையர் யாரோ ஒருவரை அணைத்துக் கொண்டு மெல்ல தள்ளாடி தள்ளாடி அழைத்து வருகிறாரே! யார் அவர்?

தலையில் சிவப்புப் பட்டுக்குல்லாய், அதில் ஜ்வலிக்கின்ற தங்கக் கலசம், சிவந்த திருமேனியில் பளபளக்கும் திருமண் காப்புக்கள், அரையில் அணிந்த செக்கர் நிறத்துப் பீதாம்பரம் — இத்தனை கோலத்துடன் வருகின்ற அரையர் அந்தப் பராரியைக் கைதொட்டு மெய்தொட்டு அழைத்து வருகிறாரே? அந்தப் பராரி யார்?

உடம்பெல்லாம் செம்மண் தூசி ஒருவிரல் கனத்திற்கு ஏறியிருக்கிறதே! அரையெல்லாம் ஆயிரம் கந்தல்களாகக் கிழிந்த குசேலத்துணிகள் அறுந்து தொங்குகிறதே! அந்தப் பரதேசி யார்?

கரையில் படர்ந்து வளர்ந்திருந்த புன்னைமரம் சூரியப் புள்ளிகளைத் தண்ணீரில் அள்ளிவீசி அலைக்கழித்தது. கரையோர மண்டபத்தில் திருப்புன்னையின் கீழ் நம்பெருமாள் இன்னும் பல்லக்கில்தான் நின்று கொண்டிருந்தார். நெய் தீவட்டிகளின் ஜ்வாலைகளில் நம்பெருமாள் திருமேனி பளபளத்தது. தீர்த்தவாரியாகிச் சக்கரத்தாழ்வாரும் எழுந்தருளிவிட்டார். அடியார்களுக்கோ ஒருவித இடையூறும் இல்லாமல் நம்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளினர் என்று மட்டற்ற மகிழ்ச்சி பொங்கியது. அரங்கருக்கோ அந்தப் பூரிப்பு இன்னும் எழவில்லை!

திருவரங்கர் எதிர் நோக்கியிருந்த அந்த ஜீவனை அரையர் அழைத்துக் கொண்டு கோஷ்டிக்கு வந்ததும் திருவரங்கரின் திருமுகம் புன்முறுவலைப் பூத்தது.

அந்த ஜீவனைத் திருவரங்கருக்கு அருகில் எப்படிச் சேர்ப்பது? பார்ப்பதற்குப் பைத்தியமாய் அலங்கோலமாய் ஆசார ஹீனமாயிருக்கிறதே! ஆசாரப் பிரதானர்களான பெரியோர்கள் அதற்கு முதலிடம் கொடுப்பார்களா? அது எந்த வர்ணமோ? அதன் பாஷை எதுவோ? அதைத் தெரிந்து கொள்ளாமல் அனுமதிக்கமாட்டார்களே! அந்த ஜீவரத்னத்தை எப்படிச் சன்மானிப்பது ?

அரையர் ஆலோசித்தார். ஒரு க்ஷணம் திருவரங்கர் திருமுக மண்டலத்தைப் பார்த்தார். அரங்கனின் மௌன பாஷை அரையருக்குத் தெரிந்து விட்டது.

அவ்வளவுதான்! அரையர் கையில் தாளத்தை சப்தித்தார். டிண்...டிண்—டிண்.

திருவரங்கன் ஒரு மதயானை என்பது அரையருக்குத் தெரியாததா? மதயானையை யாழிசைத்து மயக்கும் கலையும் அரையருக்குத் தெரியும்.

அரையர் இசை அரங்கரின் திருமுன் தவழத் தொடங்கியது! இசையில் எதைப் பாடலாம்? திருவரங்கர்க்கன்றி வேறொருவர்க்குப் பேசப்படாத தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாசுரங்களையே பகடலாம் என்று அரையர் முடிவு செய்தார். அவை பத்திவியின் பாமாலைகள் அல்லவா! அரையர் திருமாலையை தேவகானத்தில் இசைத்தார். அரங்கனின் கொற்றப் புயங்கள் வீங்கிப் புடைத்தன. நல்ல சமயம் இது! உடனே அரையர் நம் பெருமாளின் கீர்த்திகளை அடுக்கு மொழிகளால் ஏத்தத் தொடங்கினார். 'பதின்மர் பாடும் பெருமான்' என்று கொண்டாடி முடித்ததும் அர்ச்சகரை ஆவேசித்தார் அரங்கர்.

அரையரும், "நாயன்றே! இவன் பேரரப் பார்ட வல்லனாயிருப்பான் ஒருவன். தேவரீர் திருவடிகளைத் தொழுவதற்

காகவே உத்தரதிக்கிலிருந்து எழுநூறு காத தூரம் நடந்து வந்திருக்கிறான். இவனை அழைத்துக் கொண்டு சிறப்பித்தருள வேணும்" என்று பிரார்த்தித்தார்.

யாரும் எதிர்பாராத பேரதிசயம் நடந்தது?

திருப்பல்லக்கிலிருந்து திருக்கைத் தலத்தில் நம்பெருமாள் எழுந்தருளி நாலு கோல் தூரம் அழகு நடையிட்டு கோஷ்டியின் கடைசியில் காத்திருந்த அந்த ஜீவனின் அருகே நின்றார். தமது திருமேனி ஸௌந்தரியத்தை ஒளிவு மறைவின்றி அதற்கு வாரி வழங்கினார். அப்படியும் அரங்கருக்கு திருப்தியில்லை. அங்குக் கூடியிருந்த அத்தனை விண்ணப்பம் செய்வாரி களையெல்லாம் அருகே பாடிட்டழைத்து, 'வாரிகோள்! இவன் வந்த தூரத்துக்கெல்லாம் போருமோ நாம் இவனுக்குச் செய்த தரம்!' என்று கூறி ஆற்றாமைப்பட்டுப் பொருமினார் அரங்கர். அந்த ஜீவன் எழுநூறு காதம் நடந்திருக்கத் திருவரங்கர் நாலு கோல் தூரம் தரையில் நடந்தது அளவாகுமோ? அந்த எழுநூறு காதமும் நடக்க வேண்டுமென்று அரங்கருடைய பேரவா. அது திருவரங்கரின் திருவருளைச் சூழ்ந்து அதனிற் பெரிய அவாவாக மலர்ந்திருந்தது.

அரங்கனின் ஜீவதாஹம் பெரிதா? அந்த ஜீவனின் பரமாத்மதாஹம் பெரிதா?— அரையரால் நிர்ணயிக்க முடியவில்லை.

அந்த ஜீவரத்னத்தைத் திருவரங்கர் திருவடியில் சேர்த்த திருப்தியுடன் திருவரங்கப் பெருமான் அரையரின் இதழ்கள் 'தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கா' என்று ஒலித்துக் கொண்டேயிருந்தன!

# ஸ்ரீ பாகவதப் பெருமை

## இளையவில்லி பூவராஹாசாரியர், M.A.

**சௌனகர் சொல்லுகிறார் :—**"வாரீர் ஸூதரே! நாரதரோ உலக வம்புகளுக்கும், வழக்குகளுக்கும் அப்பாற்பட்டவர். ஓரிடத்தில் நிற்காமல் ஓடித்திரியும் யோகி. "ஸப்தாஹ ச்ரவண" விதிப்படி ஸ்ரீபாகவதத்தைக் கேட்பதில் அவருக்கு எப்படி விருப்பம் உண்டாயிற்று! ஸநகர் முதலிய மஹர்ஷிகளை அவர் எங்கு சந்தித்தார்?"

**ஸ்ரீ ஸூதர் சொல்லுகிறார் :—** "ஸ்ரீ சௌநகரே! இவ்விஷயத்தில் உமக்கு பக்தி நிறைந்த ஓர் இதிஹாஸம் சொல்லுகிறேன் கேளும். சிஷ்யனாகிய என்னிடம் மிகுந்த அன்பு கொண்ட என் ஆசார்யரான ஸ்ரீ சுகமுனிவர் இரகசியத்தில் எனக்கு உபதேசித்தார். முன்பு ஒரு சமயம் தூய்மைமிக்கவர்களான ஸநகாதி மஹர்ஷிகள் நால்வரும் ஸாதுக்களுடன் வாழ்வதின் இனிமையைக் கருதி விசாலா நகரத்திற்கு வந்தார்கள். அங்கு நாரதரைக் கண்டார்கள். அவரை வினவினார்கள்.

"நாரதரே? உம்முகம் ஏன் வாட்டமுற்றிருக்கிறது? ஏன் கவலையுடன் காணப்படுகிறீர்? வெகு வேகமாக எங்கு செல்கிறீர்? எங்கிருந்து வருகிறீர்? பணமிழந்தவன் எப்படி வருந்துவானோ அதுபோல் வருந்துகிறீரே! உலக ஆசாபாசங்களை விட்டொழித்த உமக்கு இந்த நிலை பொருந்தாததன்றோ? இதன் காரணம் யாது?"

**நாரதர் சொல்லுகிறார் :—** "மற்ற எல்லா உலகங்களைக் காட்டிலும் இப்பூலோகம் தர்மம் செய்யச் சிறந்த இடம் என்று கருதி, அவ்விடம் சென்றேன். புஷ்கரம், ப்ரயாகை, காசி, கோதாவரி, ஹரித்வாரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், ஸேது

முதலிய புண்ணிய க்ஷேத்ரங்களில் இங்குமங்கும் திரிந்தேன். ஆயினும், எவ்விடத்திலும் மனதிற்கு ஸந்தோஷம் அளிக்கக் கூடிய சாந்தியைக் கண்டிலேன். இப்பொழுது அந்த பூலோகம் அதர்மத்திற்கு நண்பனாகிய கலி(யுகம்)யினால் மிகவும் பீடிக்கப் பட்டிருக்கிறது. உண்மை, தவம், ஆசாரம், தயை, தானம் ஆகிய இவற்றில் எதுவாயினும் சிறிதும் புலப்படவில்லை. ஜனங்களெல்லோரும் வயிற்றை நிரப்புவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, பொய் பேசுபவர்களாய் உளர். மேலும் முட்டாள்களாகவும், மிகக் குறைந்த அத்ருஷ்டசாலிகளாகவும், தர்மத்தில் சிறிதும் கண்வைக்காமல் பாஷண்டர்களாயுள்ளனர். முற்றும் துறந்தவர்கள் போல் தோன்றுபவர்கள், உண்மையில் உலகச் செல்வங்களை உடையவர்களாய்க் காணப்படுகின்றனர். குடும்பஸ்தர்களாகவும் பார்க்கப்படுகின்றனர். வீடுகள் தோறும் பெண்டிர்களே ஆட்சிபுரிகின்றனர். மைத்துனன்மார்களே மிகச்சிறந்த மந்திரிகள். பேராசையால் மக்கள் தங்கள் பெண்களை விற்கிறார்கள். அடிக்கடி கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை நடைபெறுகிறது. ஆசிரமங்களும், புனிதயாத்திரைத் தலங்களும், புண்ணிய நதிகளும், துஷ்டயவனர்களின் ஆட்சிக்கு உட்பட்டுள்ளன. ஒரு யோகியாவது, ஒரு ஸித்தனாவது, ஒரு ஞானியாவது, ஒரு நற்காரியம் செய்பவனாவது காணப்படவில்லை. நல்லொழுக்கம் கலியாகிற காட்டுத்தீயால் சாம்பலாக்கப்பட்டு விட்டது. ஜனங்கள் எல்லோரும் சோற்றை விற்று ஜீவிக்கிறார்கள். பிராமணர்கள் வேதத்தை விற்று ஜீவிக்கின்றனர். பெண்கள் வ்யபிசாரத்தால் பிழைக்கின்றனர். இந்தவிதமாக கலியின் தோஷங்களைப் பார்த்துக் கொண்டு பூமியில் திரிந்தேன். முடிவில் கிருஷ்ணலீலைகள் நிகழ்ந்த யமுனைக் கரைக்குச் சென்று சேர்ந்தேன். அங்கு ஓர் வியப்புக்குரிய நிகழ்ச்சியைக் கண்டேன். அதைக் கேளுங்கள் முனிச்சிரேட்டர்களே! அங்கு ஓர் அழகிய இளம் பெண், மிகுந்த மனவருத்த முடையவளாய் அமர்ந்திருந்தாள். அவளருகில் இரண்டு கிழவர்கள் கீழே படுத்திருந்தார்கள். அவர்கள்

மூச்சு விட்டுக்கொண்டிருந்தார்களே ஒழிய, ப்ரஜ்ஞையற்றிருந்தனர். அப்பெண்மணி அவர்களின் மயக்கத்தைத் தெளிவிக்க முயன்று கொண்டும், அவர்களை எழுப்பிக் கொண்டும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுபவர்கள் யாரேனும் உண்டோ என்று பத்துத் திசைகளிலும் தன்பார்வையைச் செலுத்துபவளாகவும் காணப்பட்டாள். நூறு பெண்கள் அவளுக்கு விசிறிக் கொண்டும் அடிக்கடி அவளை சமாதானப் படுத்திக் கொண்டும் இருந்தனர். தூரத்திலிருந்து இதைக் கண்ட நான் ஆவலுடன் அவளருகில் சென்றேன். என்னைப் பார்த்து எழுந்த அவள் தழுதழுத்த குரலில் இங்ஙனம் மொழிந்தாள்.

அப்பெண் கூறினள் :—"ஓ ஸாது! ஒருக்ஷணம் இங்கு நில். என் கவலையைப் போக்குவாயாக. உன்னைக் கண்பதால் லோகங்களின் எல்லா பாபங்களும் அழிந்துவிடும். உன் வார்த்தையைக் கேட்டவளவில் பலவகையான துக்கங்களும் தீரும். மிகுந்த பாக்யமிருந்தாலொழிய உன் தரிசனம் கிடைக்காது."

நாரதர் சொல்லுகிறர் :—"பெண்ணே! நீ யார்? இவர்கள் யாவர்? தாமரை போன்ற கண்களையுடைய இப்பெண்கள் யாவர்? உன்னுடைய துக்கத்திற்குக் காரணத்தை விரிவுக்கஞ்சாமல் கூறுவாயாக."

பெண் சொல்லுகிருள் :—"நான் பக்தி என்று பெயர் பெற்றவள். ஞானம், வைராக்யம் என்று பெயர்களையுடைய இவர்கள் இருவரும் என் புதல்வர்கள். காலயோகத்தினல் உடல் நலிந்தார்கள். இப்பெண்மணிகள் கங்கை முதலிய நதிகள். எனக்குத் தொண்டு புரிய வந்துள்ளார்கள். தேவதைகளால் இவ்வாறு வணங்கப் பட்டாலும்கூட எனக்கு நன்மையில்லை. தவச்ரேட்டனே! இப்பொழுது என் கதையை மிகுந்த கவனமுடன் கேட்பாயாக. என் கதை மிகப் பெரிது.

ஆகிலும் அதைக் கேட்டு எனக்கு மன அமைதியை உண்டாக்கு வாயாக—நான் திராவிட தேசத்தில் பிறந்தவள். கர்னுடக தேசத்தில் வளர்ந்தவள். மகாராஷ்ட்ரத்தின் சில பாகங்களி லும், குர்ஜரதேசத்தின் பாகங்களிலும் வசித்து முதுமை யடைந்தேன். அந்த குர்ஜரதேசத்தில் பயங்கரமான கலி பரவினபடியால் ஜனங்கள் பாஷண்டிகள் ஆனுர்கள். நான் என் புதல்வர்களுடன் வெகு நாட்களாக பலமிழந்திருக்கிறேன். பிறகு நான் ப்ருந்தாவனம் போய்ச் சேர்ந்தேன். அந்தத் திவ்யதேச மகிமையால் மீளவும் புதியவள்போல் அழகிய உருவமுடையவளாகவும், யௌவனப் பருவம் உடையவளாக வும் ஆனேன். இப்பொழுது யுவதியாய் எல்லோரும் பார்த்து ஆசைப் படும்படியானேன். இதோ படுத்துக் கொண்டிருக்கக் கூடிய என் புதல்வர்கள் இருவரும் இளைப்புற்று வருந்துகிறுர் கள். நான் இவ்விடத்தை விட்டு வேறு 'இடம் செல்ல நினைந் துள்ளேன். ஆனுல் இவ்விரு புதல்வர்களும் கிழத்தன்மை யடைந்துள்ளமையால் மிகவும் துக்கம் அடைகிறேன். நான் அவர்களுக்குத் தாயாய் இருந்தும் யுவதியாய் இருக்கிறேன். எனக்குப் பிள்ளைகளாயிருந்தும் இவர்களிருவரும் கிழவர் களாய் விட்டனர்,

நாங்கள் மூவரும் ஒன்ருய் வசித்த போதிலும் இந்த விபரீதம் எப்படி ஏற்பட்டது? தாய் கிழவியாகவும், பிள்ளைகள் இளைஞர்களாகவும் இருப்பது இயற்கை. இதனுல் நான் வியப் புற்றவளாகி ,வருந்துகிறேன். யோகீச்வரனே! புத்திமானே? இதற்குக் காரணம் என்னவாயிருக்கும்? கூறவேணும்."

**நாரதர் சொல்லுகிருர் :—**"குற்றமற்றவளே! நான் என் ஞானக்கண்ணுல் உன் கஷ்டங்களையும் அவைகளின் காரணங் களையும் அறிகிறேன். வருந்தாதே ஸ்ரீஹரி உனக்கு மங்களங் களை அளிப்பான்."

(வளரும்)

# தேவு மற்றறியேன்—14

எம்பெருமானுடைய அருளைக் காட்டிலும் ஆழ்வாரருளே ஏற்றமுடைத்து என்று மதுரகவிகள் மேல் பாசுரத்தில் ஸாரமாக அருளிச் செய்கிறார். ஆசார்யக்ருபையின் ஏற்றத்தைச் சென்ற இதழில் இதற்கு முன்னுரையாக அநுபவித்தோம் இனி மேல்பாட்டு:

அருள்கொண்டாடும் அடியவரின்புற
அருளினான் அவ்வருமறையின் பொருள்
அருள்கொண்டு ஆயிரமின்தமிழ் பாடினான்
அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே. (8)

வேதாந்தங்கள் ரஹஸ்யமென்று மறைத்துப்போந்த அர்த்தங்களை, பகவத்க்ருபையைப் பாராட்டும் அவனடியார்கள் மகிழும்படி நம்பொருட்டு ஆழ்வார் வெளிப்படுத்தினார். * மயர்வறமதி நல மருளின அவனருளைப்பற்றுசாகவும் அவன்

**Dr. V.V. ராமானுஜம்**

தந்த ஞானத்தை முதலாகவும் கொண்டு இனிய தமிழ்ப் பாக்களாக திருவாய்மொழியாயிரத்தையும் ஈந்த ஆழ்வாரின் பெருங்கருணையே இவ்வுலகினில் மிகப்பெரிதாகவுள்ளது.

தம்மிடம் சிறிது நலன் ஏதேனும் உளதாகில் * அதுவு மவனதின்னருளே என்று பகவத்ப்ரஸாதமாக உண்டானதாக எண்ணிப் போற்றுவது மெய்யடியார் இயல்பு. * அருள் கொண்டாடுமடியவரான இவர்கள் மனமகிழும்படி, பெறற்கரிய ரஹஸ்யங்களான வேதாந்தார்த்தங்களை தர்ம க்ஷேத்திரத்தில் இரு சேனைகளின் நடுவே நமது கீதாசார்யன் வெளியிட்டருளியது ப்ரஸித்தம். அந்த பார்த்தஸாரதியின் அருளைப்பற்றி நின்றே ஆழ்வார் * தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகளாக அமிழ்தினுமினிதாகத் தித்திக்கும் தமிழ்

மொழியில் திருவாய் மொழியாயிரத்தையும் பாடியது. இந்த மஹோபகாரத்தைச் செய்த ஆழ்வாரின் காருண்யம் ஈடு இணையற்றதாய் விளங்குகிறது. ஸ்ரீ பார்த்தஸாரதியின் அருளால் திருவாய்மொழி அவதரித்ததுஎன்பது நஞ்சீயர் வ்யாக்யானத்தில் காணும் சீரிய பொருள். 'பரம ரஹஸ்யமான வேதார்த்தத்தை நிர்ஹேதுகமாகத் தன்பக்கல் ஆசாவேச முடையார் வாழும்படி கீதோபநிஷதாசார்யனாய் நின்று வெளியிட்டான். வேதாதிகாரிகளுக்கு உஜ்ஜீவனமாம்படி எம்பெருமான் செய்தது; அநதிகாரிகளும் க்ருதார்த்தராம் படியிறே ஆழ்வாரருளிச் செய்தது" என்று இங்கு பங்க்திகள். "அவ்வரு மறையின் பொருள் அருளினன் அருள் கொண்டு" என்று அந்வயம் கொண்டு பொருளருளிச் செய்துள்ளார்.

பகவத்க்ருபையை உலகத்தவர் கொண்டாடுவர்; ஆழ்வாருடைய கிருபையை இவர் அதனிலும் பெரிதாக மதித்திருப்பர். பகவத்க்ருபைக்குப் பலன் அவனையடைதல் (பகவத்ப்ராப்தி). அந்த ப்ராப்திக்கு மூலமான ஞானத்தைத் தருவது ஆசார்யனருளன்றோ? அந்த அருளே மிகப் பெரிது.

**அருள் கொண்டாடுமடியவராகிறார்:** மற்றைய ஆழ்வார்கள். * ஆனைக்கன்றருளை ஈந்த—என்றும், *' நின்னருளே புரிந்திருந்தேன்— என்றும், * நாளும் தொண்டரானவர்க்கு இன்னருள் செய்வாய்! அடியேற்கு அருளாய் உன்னருளே— என்றும், * அருளாதொழியுமே? என்றும் அவனருளையே தலைசிறந்ததாகப் போற்றுவார்கள். இப்படி நல்லாரான (பரமஸாத்விகர்களான) அடியார்களுடைய முகமலர்த்திக்கன்றி ஈச்வரனுடைய ப்ரியத்துக்காகவன்று ஆழ்வார் திருவாய்மொழி பாடியது.

பகவத் குணங்களில் கிருபையே தலையான குணம். அதில்லாதபோது மற்ற கல்யாண குணங்கள் ஜீவனற்றவைகளாக நிற்கும். ஸ்ரீமந் நாராயணன் மற்ற தெய்வங்களெல்லாவற்றிலும் கொண்டாடத் தகுந்தவனாயுள்ளது போலவே அவன் குணங்களெல்லாவற்றிலும் கிருபையே

மிக்கதாக விளங்குவது. இக்குணமில்லையேல் மற்ற குணங்களால் நம்போலியர்க்குப் பயனேதுமில்லை. கைமுதலில்லாமல் வேறு புகலேதுமில்லாமல் பகவத்க்ருபையையே தஞ்சமாக நோக்குமவனுக்கு அவன் வெறுமை கொண்டு தன் க்ருபையால் கார்யம் செய்யும். கர்மஜ்ஞாநாதி ஸ்தானங்களைப் பின் பற்றுபவனுக்கும் "இவன் இவ்வளவு செய்தானே" என்று பகவான் நெஞ்சில் உண்டாகும் ஈரப்பாடான க்ருபையே கார்யம் செய்கிறது ஆக இரண்டு வித அதிகாரிக்கும் கார்யம் செய்து கொடுப்பது க்ருபையே.

த்வயாபிலப்தம் பகவந்! இதாநீம் அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா: யதிமே நதயிஷ்யஸே தத: தயநீயஸ்தவ நாத! துர்லப: என்று விண்ணப்பம் செய்கிறார் பரமாசார்யரான ஆளவந்தார், "எம்பிரானே! உன்னையே நம்பியுள்ளமையால் உன்னருளைக் கொள்ள சிறந்த பாத்திரமாக நானுனக்குக் கிடைத்துள்ளேன். என்னை விட்டாயகில் என்னையொத்த பாத்திரம் கிடைக்கமாட்டான்" என்று கூறி அவனருளை வேண்டுகிறார்.

**அருமறையின் பொருள்** * ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் என்று ஆழ்வார் பாரிக்கும் அவன் திருவடிக்கீழ் குற்றவேல் (அந்தரங்க கைங்கர்யம்) நாம் விரும்பிப் பெறவேண்டிய புருஷார்த்தம் (பேறு). அப்பேற்றைப் பெறுவிக்கும் ஆறு (உபாயம்) அவன் திருவருளே. இதுவே திருவாய்மொழியில் ஆழ்வார் காட்டும் மறைப்பொருள். கருணைக்கு உறைவிடம் பகவான். அதற்குக் கொள்கலம் நம்போலியர்கள்.

**அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடுகை:** அவனருள் மூலமாக இவர் திருவாய்மொழி பாடியமை. * என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசன்; * என் முன் சொல்லும் முதல்வன்; * என் நாவில் வந்து புகுந்து நல்லின்கவி சொன்ன என் வாய்முதலப்பன் என்றெல்லாம் ஆழ்வாரே சொல்லு கையாலே, இந்த இன்தமிழ் பாடியது பகவானுடைய

அருளாலே. அவன் தானே பாடிய கீதை வரைமுறுகலாக (கடினமாக) இருக்கும். இது செவிக்கினிய செஞ்சொல்லாயிருக்கும். * நெடியானருள் சூடும்படியான் சடகோபன் ஆகையாலே அவனருளன்றி இவர்க்குக் கை முதலில்லை.

அவனருள் கொண்டு பாடினாராயினும், பாடும்போது இவர் பட்டது யாரும் படார்கள். * அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன் என்று அலற்றுவது; * ஒருநாள் காணவாராயே என்று தரையில் கிடந்து கூப்பிடுவது, * அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து கரைய என்னும்படி உருகுவது; பக்ஷிகள் முதலானவற்றின் காலில் விழுந்து தூது விடுவது; மடலெடுக்கப் புகுவது; இப்படியாக இவர் பட்ட சிரமங்களை இவர் பாடியுள்ள * ஏற்கும் பெரும் புகழ் ஆயிரத்தையும் அநுபவித்தவர்க்கே உணர இயலும். ஆதலால், கீதையைப் பாடிய கண்ணனுடைய அருளைவிட இவரருளே பெரிது. * நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்தொரு மூர்த்தியான கண்ணன் பாடல் உலகத்தவர் யாவரையும் திருத்திற்று என்ன முடியாது. ஆனால் * ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்றப் பண்ணி நல்லாராக்கிற்று, இவர் அருள் கொண்டு பாடிய ஆயிரமின் தமிழ்

**அருள் கண்டீர்! மிக்கதே !** * கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல் என்னும்படி இவர் பாடிய இன் தமிழ்ப் பாக்கள் விண்ணாட்டில் மிக்காப்போலே இந்நாட்டில் இவரருள் மிக்கது. இவரருள் இங்கு ஸாம்ராஜ்யம் பண்ணுகிறது. இவர் ஊரையும் பெயரையும், * **குருகூர்ச்சடகோபன்** சொன்ன ஆயிரம் என்று திருநாமப் பாட்டில் பாடும்போது லோக மடங்கக் கையெடுத்துக் கும்பிடுவதை, **கண்டீர்!**— நேரில் கண்டீர்களே. இவரருளின் பெருமையை ஒருவர் கூற வேண்டாவே. இந்த லோகத்தையும் ஆழ்வார் அருளையும் சீர் தூக்கிப் பார்த்தால் அருளே மிக்கதாயிருக்கும். * கடல் மண்ணெல்லாம் விலையோ? என மிளிரும்படி உள்ளது இவருடைய காருண்யம். கடல் சூழ்ந்த மண்ணுலகமெல்லாம் இவரருளுக்கு ஈடாகாது.

(தொடரும்)

# திருவாய்மொழியும் த்வயமும்

ஸ்ரீமதே நாராயணாய நம: என்னுமுத்தரவாக்யத்திலே நாராயணபதத்தின் மேலுள்ள விபக்தி நான்காம் வேற்றுமை யாகும். அவ்வப்யாத்துக்கு அர்த்தம் கைங்கரியமாகும். இந்த கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது. அதாவது கைங்கரிய ப்ரார்த்தனையைக் கூறுகிறது என்றபடி. கைங்கரியமாவது— பகவந்முக விகாஸ ஹேதுவான வ்யாபாரம். இக்கைங்கர்யம் தான் "ஏதத் ஸாம காயந்நாஸ்தே" என்றும் "நம: இத்யேவ வாதிந:" "இரைத்து நல்ல மேன் மக்கள் ஏத்த" என்றும் "யேந யேந தாதாகச்சதி தேநதேந ஸஹ கச்சதி" "சூட்டு நன் மாலைகள் தூயன வேந்தி" என்றும் சொல்லுகிறபடியே

**வேளுக்குடி K. வரதாசாரியர்**

வாசிக காயிக ரூபமாயிருக்கும். நாராயணாய என்கிற சதுர்த்தி கைங்கர்யத்தில் இரப்பைக் காட்டுகிறது. "எய்தியும் மீள்வர்கள்" என்கிறபோகம் போலன்றிக்கே மீளாவடிமைப் பணியாய், சிற்றின்பம் போலன்றிக்கே அந்தமிலடிமையாய், வந்தேறி யன்றிக்கே "தொல்லடிமை" என்னும்படி ஸஹஜமாய் "உகந்து பணி செய்து" என்னும்படி ப்ரீதியாலே வரக் கடவதாயிருக்கிற அடிமையைக் கருத்தறிவார் "ஏவ மற்றமரர் ஆட்செய்வார்" என்னும்படி சொல் பணி செய்யுமா போலே "முகப்பே கூவிப்பணி கொண்டருள வேணும்" என்கிற இரப்போடே பெறவேணும். "பவாநி" "அடிமை செய்ய வேண்டும் நாம்" என்று ஸ்ரீபாஷ்யகாரரும் ஆழ்வாரும் ப்ரார்த்திக்கையாலே இங்கும் ப்ரார்த்தநாபர்யந்தமாக அர்த்தமென்னப்பட்டது "த்வத்ஸாம்யமேவ பஜதாமபி வாஞ்சலி த்வம் தத்ஸாத் க்ருதை: விபவ ரூபகுணைஸ்

த்வநீயை: முக்திம் ததோஹி பரமம் தவஸாம்யமாஹு:
த்வத்தாஸ்யமேவ விதுஷாம் பரமம் மதம் தத்'' என்று ஆழ்வான் அருளிச் செய்தாரிறே. இங்கு சதுர்த்தி தாதர்த்ய முகத்தாலே கைங்கரியத்தைக் கணிசிக்கிறது என்றபடி. சரணுகதனும் போது சரண்யனே அபிமத ப்ரார்த்தனை பண்ணு கிறுனைகையாலே இங்கு பரிபூர்ணுநுப பூர்வகமான கைங் கரியத்தைப் பிரார்த்திக்கிறது என்றதாயிற்று. அதிகாரியி னுடைய ஸ்வரூபாநுரூபமாய் நிரதிசய போக்யமுமாய் தாரகமுமாயிருக்கிற கைங்கரியத்தினுடைய அபிநிவேசா திசயத்தாலே தேசகால ப்ரகாரவஸ்தாதிகார நியம விதுர மாகப் பிரார்த்திக்கக் கடவனுயிருக்கையாலே ஸர்வதேச ஸர்வ கால ஸர்வாவஸ்த்தைகளிலும் ஸர்வ ப்ரகாரத்தாலும் பண்ணும் விருத்தி விசேஷத்தைக் கூறுவது இந்த சதுர்த்தி. இவ்வர்த்தத்துக்குத்தக்க பாசுரங்களை ஒன்பதாம் பத்திலுள்ள வற்றை ஸாரஸங்க்ரஹத்திலே பின் உலகாரியன் தொகுத்து அருளிச் செய்துள்ளார். அவற்றையினி நாமநுபவிப்போம்.

1. பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து! (9.2.1):—
''என்னடியார் அது செய்யார்'' என்னும் உன் கடாக்ஷமும், ''நகச்சிந்நாபராத்யதி'' என்னும் அவன் கடாக்ஷத்தையும் பெற்று ''க்ருபயா பர்யபாலயத்'' என்று க்ருபா பரதந்த்ரனை உன் கடாக்ஷமும், அப்பாரதந்த்ர்யத்துக்கடியான அவன் கடாக்ஷமும் பெற்று. அவனுடைய பாரதந்த்ர்யம் ப்ரணயித்வ மன்றோ. நிலைநிற்குமோ. ஸ்வாதந்த்ர்யமன்றோ ப்ரக்ருதி'' என்று அஞ்சவேண்டா. அவனருகேயிருக்க ஸ்வாதந்த்ர்யம் ஜீவியாது. ஆகையிறே முற்கூற்றில் அவனைப் புருஷகாரமாகப் பற்றுகிறது.

நின் கோயில் சீய்த்து: உகந்தருளின நிலங்களிலே அஸாதாரண பரிசர்யை பண்ணி. தந்தாமுடைய ஸுக்ருதத்தாலே பகவதநுக்ரஹமுடையரானவர்கள் தந்தாம்

க்ருஹங்களைப் பேணுபவர்கள். பிராட்டி புருஷகாரமாக பகவத் ப்ரஸாதம் பெற்றவர்கள் உகந்தருளின நிலங்களைப் பேணுநிற்பார்கள். "நகிஞ்சதபி குர்வாண: விஷ்ணோ ராய தநே வஸேத்"। ஒரு துரும்பு நறுக்கேன் என்னுமவர்களுக்கும் உகந்தருளின நிலத்தைப் பற்றிக் கிடக்கவேணும். சரீர ஸம்பந்தமற்றால் பெற வேணுமென்று ஆசைப்படுகிற அடிமையை இச்சரீரத்தோடே கிடைக்குமாகில் விடானிறே. சரணாகதனுக்கு திவ்ய தேசங்களில் பரிசர்யை உபாயத் திலந்வயியாது. ஸ்வயம் ப்ரயோஜநமாயிருக்கும். திருக் கண்ண மங்கையாண்டான் திருமகிழடியிலேயிருந்து சருகைத் திருவலகிட்டார் என்று ப்ரஸித்தம்.

2. "நின் தீர்த்த அடிமைக் குற்றவேல் செய்து" (9.2.2): தன்னுடைய ரஸ்யதையாலே இதர புருஷார்த்தத்தில் நசையறுக்கவல்ல அடிமைகளில் அந்தரங்கமான அடிமை களைச் செய்து. உனக்கேயற்றுத் தீரப்பண்ணுகிறபடியை செய்து என்றபடி.

3. "தொடர்ந்து குற்றேவல் செய்து" (9.2.3): "இத் தசையில் செய்யவடுப்பது இது" என்று உணர்த்தி அந்தரங்க வ்ருத்தியைப் பண்ணி. பெருமாள் தமக்கு அபிமதங்களில் அவஹிதரன்றிக்கேயிருந்த போதும் இவ்வடிமையைக் கொண்டருள வேணும் என்று வடிம்பிட்டு இளையபெருமாள் அடிமை செய்தாற் போலே என்றவாறு.

4. "கொடுவினையேனும் பிடிக்க" (9.2.10)। பெருமாளும் பிராட்டிமார்களுமான ஸந்நிதியுண்டாயிருக்க இழப்பதே என்னும் இன்னாப்பாலே கொடுவினையேன் என்கிறார்.

5. "உறுவதிது என்று உனக்காட்பட்டு" (9.4.4) சீரியது அடிமை செய்யுமது என்று உனக்கு அடிமைபுகுந்து. ஸ்வரூபம் பகவத் பரதந்த்ரம் என்று உணர்ந்தால் சீரிய ப்ரயோஜநம் கைங்கர்யமிறே.

6. "ஆட்கொள்வானொத்து" (9,6.7): ஆட்செய்வது ஆழ்வாருக்கும் ஆட்கொள்வது பகவானுக்கும் முறையானது ப்ராப்தமானது என்று உணர்த்தியபடி.

7. "நானும் மீளாவடிமைப் பணி செய்யப் புகுந்தேன்" (9.8.4): நித்யஸூரிகள் பண்ணும் ஆத்மாந்த தாஸ்யத்திலே யன்றோ நானும் அதிகரித்தது.

இச்சதுர்த்தியாலே சேஷத்வஜ்ஞாநாநந்தரபாவியாய் அந்த சேஷத்வோபபத்திஹேதுவாய் உபாயபலமாய், "த்வத்பாத மூலம் சரணம் ப்ரபத்யே" என்று ஸ்வீகரித்த உபாயத்தின் பலமாக "கதாஹமைகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி:" என்று பெரிய முதலியாராலும், "அநந்ய சரண: த்வத் பாதாரவிந்த யுகளம் சரணமஹம் ப்ரபத்யே" "நித்ய கிங்கரோ பவாநி" என்று பாஷ்யகாரராலும் "அடிமை செய்யவேண்டு நாம்" என்று பரமாசார்யரான நம்மாழ்வாராலும் ப்ரார்த்திக்கப் படுமதாய் ஸ்வரூப விகாஸ ஸூசகமான கைங்கர்யத்தை ப்ரார்த்தித்ததாயிற்று.

ஆக சதுர்த்திவிபக்தியால் நித்ய கைங்கர்ய ப்ரார்த்தனை கூறப்பட்டது. (தொடரும்)

கீதாசார்யனின் முதல் ஆயுள் சந்தாதாரரும், பிரபல வழக்கறிஞருமான ஸ்ரீ உ. வே. P. B. அநந்தாசாரியர் ஸ்வாமியின் 80 வயது தொடக்க விழா அவரது இல்லத்தில் 9-11-79 முதல் 11-11-79 வரை, திவ்யப்ரபந்த வேதபாராயண கோஷ்டிகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதுபோலவே சாதபிஷேகம், சதாப்தி முதலியவைகளும் அவருக்கு சிறப்பாக நடைபெற கீதாசார்யன் அருள்புரிவானாக.

ஸ்ரீ ராமாநுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீ பாஷ்யம்

தமிழாக்கம் : க. சந்தானம்

**எதிர்வாதத்திற்கு மறுப்பு :** ("அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞஸா" எனும் சூத்ரத்தில் "அத" என்பதற்கு 'சாதன சதுஷ்டயத்தைப் பெற்ற பின்னர்' என பொருள் உரைக்க வேண்டும் என்ற வாதம் மறுக்கப்படுகிறது.)

அவித்யை அழிவதே மோக்ஷம், அது ப்ரஹ்மஞானம் ஒன்றாலேயே ஏற்படும் என்பது (நம்மாலும்) ஏற்கப்படுகிறது. ஆனால் அந்த அவித்யையை போக்குவதற்கு வேதாந்த வாக்கியங்கள் தெரிவிக்கின்ற ஞானமானது எத்தன்மையது என்று ஆராயப்பட வேண்டும். அதாவது அந்த ஞானம் (1) வாக்கியங்களிலிருந்து பெறப்படும் வெறும் அர்த்தஞானம் மட்டுமா, அல்லது (2) அதை அடிப்படையாகக் கொண்டு உபாசனையில் (ஆராதனம் முதலியவற்றில்) நம்மை ஈடுபடுத்தும் தன்மையதா? (என்று ஆராயவேண்டும்.)

அத்தகைய ஞானம் வாக்கியங்களால் மட்டும் ஏற்படும் வெறும் அர்த்த ஞானமாக இருக்க முடியாது. ஏனெனில் அத்தகைய ஞானம் வாக்கியத்திலிருந்தே பெறப்படக் கூடுமாதலால் அதில் நம்மை ஈடுபடுத்த தேவையில்லை. மேலும், அதனால் மட்டுமே அவித்யை அழிவதையும் நாம் காண்பதில்லை.

இவ்விடத்தில் ஒரு சந்தேகம் எழலாம். வேற்றுமை உணர்ச்சிகள் முழுவதுமாகப் போகாதவரையில் வாக்யங்களிலிருந்து அவித்யை அழியும் ஞானம் பிறப்பதில்லை; அப்படியும்

மீறி ஏற்படும் ஞானத்தால் இரட்டைச் சந்திர பிம்பம்* போன்று உடனடியாக வேற்றுமை உணர்ச்சிகள் மறையா விடினும் குற்றமன்று. மேலும், முற்றிலும் அழியாவிட்டா லும், அதன் வேர் அறுக்கப்பட்டு விட்டதால் சம்சார பந்தத் திற்கு அவித்யை பின்னர் காரணமாவதில்லை-என்று இஃதும் தகாது.

ஏனெனில் வேண்டிய சாதனங்கள் இருந்தும் அத்தகைய வேற்றுமையைப் போக்கடிக்கக் கூடியதாக ஞானம் பிறக்கா மலிருக்கும் என்பது பொருந்தாது. (மாறாக) தீய உணர்ச்சி கள் இருந்தும் குருவின் உபதேசம் போன்ற அறிகுறிகளால் அவற்றைப் போக்கும் ஞானம் உண்டாவதைக் காண்கிறோ மல்லவா? வாக்கியத்தினால் ஏற்படும் அர்த்த ஞானம் இருந்தும் அனாதியான உணர்ச்சிகளின் மிகுதியால் வேற்றுமை உணர்வு தொடர்கிறதென்று உங்களால் கூற முடியாது. வேற்றுமை உணர்ச்சிக்குக் காரணமான வாசனைகளும் தோற்றங்களே (மித்யை) என்று நீங்கள் கருதுவதாலும அவித்யையைப் போக்கும் ஞானத்தாலேயே அவைகளும் மறைய வேண்டுமா தலாலும், ஞானம் பிறந்த பின்னரும் தொடரும் பொய்த் தோற்றங்களைப் போக்குவதற்கு வேறு வழியில்லை என்று வாதிப்பதால் அவ்வுணர்ச்சிகள் என்றும் அழிக்கப்பட முடியா தவை என்றே ஆகும். மேலும் உணர்ச்சிகளால் உண்டாகும் வேற்றுமை உணர்வு வேரறுக்கப்பட்ட பின்னரும் பின் தொடர்கிறது என்பது அறிவில்லாதவர் கூற்று (வளரும்)

* கண்ணைக் கையினால் சிறிது இறுக்கிக் கொண்டு பார்த் தால் ஒன்றாக இருக்கும் சந்திரமண்டலம் இரண்டாகத் தெரியும். இருக்கும் சந்திரன் ஒருவனே என நாம் அறிந்திருப் பினும் இரண்டாகக் காணும் தோற்றம் மறையாதது போல்— என்றதான உவமை இங்கு கையாளப்பட்டுள்ளது.

# ஸ்ரீ பாஷ்யஸாரம்

ஜந்மாத்யதிகரணமென்கிற கீழதிகரணத்தில் பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் லக்ஷணமென்று தேறிற்று. இப்படிப்பட்ட லக்ஷணத்தோடுகூடிய பரப்ரஹ்மமானது ப்ரத்யக்ஷப்ரமாணத்தினால் தெரிந்துகொள்ளப்படாமற் போனாலும் அநுமாந ப்ரமாணத்தினால் ஸித்திக்கக் குறை

## P.B. அண்ணங்கராசாரியர்

யில்லாமையாலே அப்படி அநுமாநப்ரமாண ஸித்தமாகின்ற அந்த பரப்ரஹ்மத்தை வேதாந்த வாக்யங்களினால் விசாரிக்க வேண்டிய அவச்யமில்லை என்றொரு ஆக்ஷேபந்தோன்ற, அதற்குப் பரிஹாரமாக இந்த மூன்றாவது அதிகரணம் அவதரிக்கின்றது.

### சா ஸ்த்ரயோநித்வாத் 1-1-3

சாஸ்த்ரத்தை யோநியாகக் கொண்டபடியாலே—என்பது ஸூத்ரத்தின் பொருள். யோநியாவது காரணம்; அறிவதற்குக் காரணம் என்கிற விவக்ஷையினால் இங்கு யோநி சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது அதாவது—ப்ரமாணம் என்றபடி. சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டபடியாலே என்றதாயிற்று. *அப்பக்ஷோ வாயுபக்ஷ:* என்னுமிடங்களில் 'தீர்த்தத்தைக் குடிப்பவன், வாயுவை பக்ஷிப்பவன்' என்று சப்தார்த்தமானாலும், "அஸதி பாதகே ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்" என்கிற ந்யாயத்தினால் "தீர்த்தமொன்றையே குடிப்பவன், வாயுவை மாத்திரமே பக்ஷிப்பவன்" என்று பொருள் தேறுவதுபோல, இங்கும் "சாஸ்த்ர

மொன்றையே ப்ரமாணமாகக் கொண்டபடியாலே'' என்ற தாகப் பொருள்தேறும். ஆகவே, "சாஸ்த்ரமேவ யோநிः (ப்ரமாணம்) யஸ்யதத்—சாஸ்த்ரயோநி; தஸ்யபாவ:— சாஸ்த்ரயோநித்வம்; தஸ்மாத் — சாஸ்த்ரயோநித்வாத்'' என்று ஸமாஸம் கொள்ளப்பட்டதாயிற்று. பரப்ரஹ்ம மானது அநுமாநத்தை ப்ரமாணமாகக் கொண்டதாகாமல் சாஸ்த்ரமொன்றையே ப்ரமாணமாகக் கொண்டதாகையினுல் அப்படிப்பட்ட (வேதாந்த) சாஸ்த்ரத்தினுல் பரப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்டியது அவச்யமே என்பதாக ஸூத்ரத் தின் பொருள் முடிந்து நின்றது.

இங்குப் பூர்வபக்ஷம் :—"அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த் தவத்'' என்பர் சாஸ்த்ர வித்துக்கள். வேறு எந்த ப்ரமாணத் தினுலும் ஏற்படாத விஷயத்தில்தான் சாஸ்த்ரம் ப்ரவர்த்திக் கும்—என்பது இதன் தாற்பரியம். இதன்படி பார்த்தால், பரப்ரஹ்மமானது வேறு எந்த ப்ரமாணத்தினுலும் ஸித்தியா மலிருந்தால்தான் அதில் சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்குமென்றும், வேறு ஏதேனுமொரு ப்ரமாணத்தினுல் ப்ரஹ்மம் ஸித்தித்து விட்டால் அதில் சாஸ்த்ரம் ப்ரவத்தியாது என்றும் தேறு கின்றது. பரப்ரஹ்மமோ அநுமாந ப்ரமாணத்தினுல் ஸித்திக் கக் கூடியதாக இருக்கின்றது எங்ஙனேயென்னில், "பூம்யங்கு ராதிகம் ஸகர்த்ருகம்—கார்யத்வாத் கடவத்'' என்பது அநுமாந சரீரம். உலகத்தில் நாம் காண்கிற எல்லாப் பொருள்களும் ஒரு கர்த்தாவையுடையன; கர்த்தாவொருவ னில்லாமல் எந்தப் பொருளும் உண்டாவதில்லை; வீடு பானை துணி முதலிய எல்லாப் பொருள்களும் ஒரு கர்த்தாவை முன் னிட்டே உண்டானவையென்பதை அறிகிறோம். இதனுல் கர்த்தாவொருவனில்லாமல் எந்தப் பொருளுமுண்டாகா தென்கிற உறுதி தோன்றுகிறது. உடனே மற்றொன்றும் கவனிக்கிறோம்; வீட்டைக் கட்டினவனுக ஒரு கர்த்தா நமக் குத் தெரியவந்தாலும் அந்த வீடு எந்த நிலத்தில் கட்டப் பட்டதோ அந்த நிலத்திற்கு எவன் கர்த்தா என்பது நமக்குத்

தெரியவில்லை. வீடுகட்டக் கருவியாயிருக்கின்ற மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தா இன்னுனென்று அறிகின்றிலோம். பானையைச் செய்பவன் குயவனென்று காண்கிறோமானாலும் அந்தப் பானைக்கு உபாதாந காரணமான மண்ணைப் படைத்தவன் இன்னுனென்று அறிகின்றிலோம். துணிக்குக் கர்த்தா ஒரு சேணியனென்று அறிகின்றோமானாலும் அதற்கு உபாதாந காரணமாகிய பஞ்சைப் படைத்தவன் இன்னுனென்று அறிகின்றிலோம். ஆனால் கர்த்தாவொருவனில்லாமல் ஒரு காரியப் பொருளுமுண்டாகாதாதலால் கீழ் சொன்ன மண் மணல் மரம் முதலிய பொருள்களுக்கும் கர்த்தாவொருவன் இருந்தே தீரவேண்டும். அவன் தான் ஈச்வரனென்பவன்—என்று இவ்விதமாக ஈச்வரனை யறிவதானது அநுமான ப்ரமாணத்தினாலறிவதாகும். ஆக, இப்படிப்பட்ட அநுமாநமென்னும் பிரமாணத்தினால் ஈச்வரன் ஸித்திக்கவே, இப்படி ப்ரமாணாந்தர ப்ராப்தமாய்விட்ட பரப்ரஹ்மத்தின் விஷயத்தில் சாஸ்த்ரமென்னும் ப்ரமாணம் ப்ரவர்த்திக்க மாட்டாது; ஏனெனில், **"அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத்"** என்றன்றோ நியமமுள்ளது. ஆக, வேதாந்த சாஸ்த்ரமானது ஜகஜ்ஜந்மாதிகரணபூதமானப்ரஹ்மத்தினிடத்திலே ப்ரமாணமாக முடியாதாதலால் அந்த வேதாந்த சாஸ்த்ர விசார ரூபமான ப்ரஹ்ம விசாரம் செய்யத் தக்கதன்று—என்பதாகப் பூர்வ பக்ஷம் ப்ராப்தமாக; **இதற்குமேல் ஸித்தாந்தம் வருமாறு:—**

அநுமானத்தினால் ஒன்றை ஸாதிப்பதானால் அது செவ்வனே ஸித்திக்கக்கூடிய விஷயமன்று. அநுமானத்தினால் ஈச்வரனே ஜகத்கர்த்தாவாக ஸித்திக்கவேணுமென்கிற நியதியில்லை; ஏனென்னில்; விச்வாமித்ர முனிவர் தவவலிமையினால் மிகுந்த பெருமை பெற்று நூதந ஜகத்ஸ்ருஷ்டி பண்ணி

ணரென்பதை நாம் ஸ்ரீராமாயணாதிகளில் வாசிக்கின்றோம். *அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி* இத்யாதி ச்லோகங்கள் பலர் அறிந்தனவே. அம்முனிவர் ஒரு ஜீவவ்யக்தியேயல்லது ஈச்வரனல்லர்; இதனால் ஜீவகோடியிலேயே அதிசயித்த சக்தி படைத்த சிலர்க்கு விசித்ர ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ண ஆற்றலுண்டு என்பது தேறுகிறபடியால், மேற்காட்டிய அநுமானத்தினால் ஈச்வரனே ஜகஜ்ஜந்மாதிகாரண பூதனாக ஸித்திக்க வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. விலக்ஷண சக்தியுக்தனான சேதநனே ஸ்ருஷ்டிகர்த்தாவாகத் தேறலாமாதலால் அநுமானம் ஈச்வர ஸாதநத்தில் சக்தியுடையதன்று; ஆகவே சாஸ்த்ரமே பரப்ரஹ்ம ஸித்தியில் ப்ரபல ப்ரமாணமாகக் கடவது. அப்படிப்பட்ட சாஸ்த்ரம் வேதாந்த சாஸ்த்ரமே. அதைக் கொண்டு ப்ரஹ்ம விசாரம் செய்வது நன்றாகப் பொருந்தும்.



(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்று தத்வத்தைத் தெரிவித்தாள். அந்த பரம்பொருளை அடைந்து அவனுக்குத் தொண்டு பூண்டு இருத்தலே மோக்ஷத்தில் நாம் செய்வது. அதையும் "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று உணர்த்தினள்.

இந்த புருஷார்த்தத்தை அடைய நாம் செய்யும் பக்தியே உசிதம். பகவானிடத்தில் பக்தியை இன்ன போதில்தான் செய்ய வேண்டும், இன்ன இடத்தில்தான் செய்ய வேண்டும், இன்னார்தான் செய்யவேண்டும் என்ற நியமங்கள் கிடையாது. பக்தி செய்ய வேண்டும் என்ற ஆவலே போதுமானது. ஆண்டாள், எல்லா குணங்களும் பரிபூர்ணமாக உள்ள இடத்தில்தான் பகவத் பக்தி செய்ய வேணும் என்கிறாள். அது எங்கே? நம்மை அனுக்ரஹிக்க வேணும் என்னும் ஒரே நோக்குடன் நம் வீடுகளிலும் கோவில்களிலும் அர்ச்சா ரூபியாய் பூரணமாக எல்லாக் கலியாணகுணங்களுடனும் நித்யமாய் ப்ரத்யக்ஷமாய் ஸாந்நித்யம் செய்திருக்கும் இருப்பு தான் அர்ச்சாவதாரம். வேதமும் கடவல்லி முதலிய உபநிஷத் மூலம் அர்ச்சையையே குணபூர்த்தியுள்ள இடமாகச் சொல்லியிருக்கிறது. இந்த அர்ச்சா ஸ்தலங்கள் எல்லாக் காலத்திலும் இருந்திருக்கின்றன. 'ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முகபாகமத்' என்று ஸீதையுடன் ஸ்ரீராமன் வழிபட்ட ஸ்ரீரங்கநாதன் கோவில் இருந்திருக்கிறது. ஆக ஸ்ரீரங்கம், திருவேங்கடம் முதலியவை ஸ்ரீபாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. 'இப்பேர்ப்பட்ட அர்ச்சா ஸ்தலங்களில்தான் ஆண்டாள் பகவானுடைய திருநாம ஸங்கீர்த்தனம் செய்து ஆத்ம க்ஷேமம் பெற்றிருப்பதுடன் அவ்வழியையே உலகத்தாருக்கும் உபதேசித்திருக்கிறாள். மேலும் ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் ஒருவனுடைய சாதி, குலம் இவற்றைப் பற்றியே மேன்மை பேசப்படுவதில்லை. பகவானிடம் அன்பு பூண்டவர் என்ற பெருமை கொண்டே ஏற்றம் சொல்லப்படும்

குலசேகராழ்வார் பகவானிடத்தும் பகவத் பக்தர்களிடத்தும் அன்பு பூண்டவர். இவர் திருவேங்கடமலையில் ஒரு பறவையாகவோ, செடி கொடியாகவோ இருக்கும் பகவானுடைய ஸம்பந்தத்தைவிட, பகவத் ஸம்பந்தமில்லாத அரிதான மானிடப் பிறவியை தாழ்ந்ததாகவே கருதினர். "எம்பெருமான் திருமலை மேல் ஏதேனுமாவேனே" என்ற இவர் பதிகம் காண்க. அதே போல் ஆண்டாள் பெரியாழ்வார் என்கிற சிறந்த ஞான பக்தி பெற்ற பிரம்மணோத்தமர் திருமகளாயிருந்தும் தாழ்ந்த கோப ஜன்மாவை ஏறிட்டுக் கொண்டதும், அவர்களுக்கு உண்டான பகவத்தாஸ்யத்தை (பக்தியை)யிட்டேயாகும். இந்த தாஸ்ய ஞானம் பரமபதத்தில்தான் பூர்ணமாக பிரகாசிக்கும் என வேதங்கள் கூறுவதை, கோபிகள் இங்கேயே பெற்றது போல் ஆண்டாளும் பெற்ருள். பகவானை ஸத்ததர்மமாக அதாவது அர்ச்சையை பற்றுவது தான் ச்ரேயஸ் என்று தெரிவிக்கிருள்.

ஆக பகவான், ஜீவன், உலகம் எல்லாம் நித்யமான ஸத்யங்கள். மொழி, இனம், மதம் முதலிய வேற்றுமைகள் பகவத் பக்திக்குத் தடையில்லை. எல்லாக் காலத்திலும் எத்தனை ஜன்மம் எடுத்தாலும் பகவானுக்கு உற்ற எல்லா கைங்கர்யங்களையும் (தூய்மையுடன் நாம ஸங்கீர்த்தனம்) ஆசைப்படுவதுதான் மோக்ஷம் (ஸ்வரூபம்) என்று ஸுலபமாய் உபதேசித்திருக்கிருள் அல்லவா? திருப்பாவை கற்றதனுலேயே விசிஷ்டாத்வைத மதஸ்தாபகரான ஸ்ரீராமானுஜரும் உபநிஷத், ப்ரஹ்மஸூத்ரம், கீதை முதலிய வாக்யராசிகளுக்கு உண்மையான வேதக் கருத்தை எளிய நடைமுறையில் ஸம்ஸ்க்ருத பாஷையில் இயற்ற முடிந்ததாக ஸந்தோஷப் படுகிருர். திருப்பாவை ஜீயர் என்றும் பெயர் பெற்ருர்.

ஆக திருப்பாவை முப்பதும் வேதமனைத்துக்கும் வித்து என்று கூறுவது சாலப் பொருத்தமுள்ளது என்ற உண்மையைக் காண்கிருேமல்லவா?

# தொண்டரடிப்பொடி ஆழ்வார்

**நான்மறையோர் கொண்டாடும் நாள்:** மார்கழி மாதமா வந்தாலே தனி அழகு! விடியற்காலையில் எல்லாக் கோயில்களிலும் மணியோசைகள், திருப்பாவைப் பாடல்கள்! பஜனைகள்! கதா காலக்ஷேபங்கள்! எந்த மாதத்திற்கும் இப்படிப்பட்ட பெருமை இல்லை, ஏன் தெரியுமா? 'மாதங்களில் நான் மார்கழி! ஸ்தலசயனத்துறைவார் என்று ஸ்ரீ பார்த்தஸாரதி (கண்ணன்) கூறி விட்டான். பார்த்தஸாரதியே மார்கழி மாதமாக இருக்கிறான். ஆதலால், பெருமைக்கு என்ன குறைவு? ஆண்டாளும் இதை அறிந்தாள். மார்கழி நோன்புக்கு

## ஸ்தலசயனத்துறைவார்

இம்மாதத்தையே சிறப்பாகத் தேர்ந்தெடுத்தாள். பகவானின் திருவுருவாகிய இம்மாதத்தில் ஆழ்வார்களுள் ஒருவர் அவதரித்துள்ளார். அவர் தான் தொண்டரடிப் பொடியாழ்வார்! கேட்டையில் பிறந்தவர்கள் குடும்பத்தில் உள்ள மற்றவர்களைக் காட்டிலும் தனிப் பெருமை பெற்று விளங்குவார்கள். ஆழ்வார்கள் குடும்பத்திலேயே (பதின்மருள்) இவர் தனிப் பெருமை பெற்றவர்! மறையோர் குலத்திற்கே மணி விளக்காய்த் திகழ்கின்ற இவரது திருவவதார நன்னாளே (மார்கழிக் கேட்டையே) நான்மறையோர் கொண்டாடும் நாளாகும்.

**அடிமையாக இருப்பதில் என்ன ஆசையோ!:** சுதந்திர உணர்ச்சி மேலோங்கிய காலம் இது! அடிமை என்ற பேச்சுக்கே இடமில்லை! இச்சொல்லை எவரும் விரும்புவதில்லை அடிமையாக இருக்கவும் எண்ணுவதில்லை. ஆனால், ஒவ்வொருவருக்

**பள்ளியுணர்த்தும் பிரான்!** பகவானைத் துயிலெழுப்பும் மரபு தொன்றுதொட்டு இருந்து வருகிறது. விசுவாமித்திர முனிவர் இராமனைத் துயிலெழுப்பி இருக்கிறார். 'கௌசல்யா ஸுப்ரஜா ராம!... உத்திஷ்ட' என்று எழுப்பி இருக்கிறார். இராமனுக்கு முதலில் ஸுப்ரபாதம் பாடியவர் இம்முனிவர்! பகவத் ஸன்னிதிகளில் ஸுப்ரபாதம் அநுஸந்திக்கும்போதெல்லாம் இந்த சுலோகமே தொடங்கப்படுகிறது! பிராட்டியே பகவானை எழுப்புவதையும் காண்கிறோம்! பூமிப்பிராட்டியே ஆண்டாளாக அவதரித்தாள். அவள் 'உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்!' உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்' என்றெல்லாம் கூறிக் கண்ணனைத் துயிலெழுப்பினாள்.

அறியாமையில் கிடந்து உறங்கிய தம்மைப் பெரிய பெருமாள் திருவருட் கருணையால் உணர்த்திய பேருதவியைத் தொண்டரடிப்பொடிகள் நினைத்தார். தன்பால் ஆதரம் பெருகவைத்த அரங்கனுக்கு மிகவும் அற்புதமான திருப்பள்ளியெழுச்சியை அருளிச் செய்தார். 'உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்று ஆண்டாள் கூறியவாறு அரங்கன் உகந்த கைங்கரியத்தைச் செய்வதையே தானுய்யும் வழியாகக் கொண்டு வாழ்ந்தவர் இவ்வாழ்வார்.

**ஆழ்வாரின் அறிவுரை கேண்மின் :** 'உயர்ந்த தெய்வம் எது? நமக்கு வாழ்வளிப்பது எது?' என்று அறியாமல் இளைஞர்கள் தத்தளிக்கும் காலம் இது! எந்நாளும் நிலைத்து நின்று அருள் கொடுத்துக் காக்க முடியாத தெய்வமெல்லாம் இந்நாளில் பரதேவதையாகக் கொண்டாடப்படுகிறது; அந்தோ! காலத்தின் கோலம்! 'நமக்குத் தலைவன் ஸ்ரீமந் நாராயணன்! அவன் அழிவில்லாதவன்! அவனே நமக்கு யோக க்ஷேமங்களை அளிப்பவன்! 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்று சொன்னவன் அவன்! எல்லா நன்மைகளையும் நமக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறான்! அழைத்தவுடன் வந்தளித்துக் காப்பவன் அவன்!

முதலைவாய்பட்ட கஜேந்திரன் அழைத்தானே; ஓடிவந்து காக்கவில்லையா? பிரகலாதனைக் காக்க அரியுருவாய் கம்பத்தில் தோன்றவில்லையா? தன்னையே நம்பிய பாண்டவர்களுக்காக அரும்பாடு பட்டுத் தேரோட்டிப் போரை நடத்திக் காத்தனனே!

மோட்சத்தைக் கொடுக்க வல்லவன் ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு யார்? செல்வம் வேண்டுவோர் திருமகளிடம் சென்று வேண்டிப் பெறவேண்டும்! ஏழ்மையைத் தரும் (மூதேவி) ஜ்யேஷ்டையிடம் சென்று மடி ஏந்தி நிற்பார்களா? நன்மைகளைப் பெற வேறு தெய்வங்களை நாடிச் செல்வது இதைப் போலன்றோ இருக்கிறது! இனி மயக்கத்திலிருந்து விடுபடுங்கள்! அறியாமை வலையிலிருந்து விலகுங்கள் பாவத்தைத் தேடிப் பெறுநீர்! இதோ அரங்கம்; இங்கே திருவரங்கன்! எல்லோரும் வந்து இவனை வணங்கி நன்மை பெறுங்கள்.

**கேட்டிரே! நம்பி மீர்காள் கெருட வாகனனும் நிற்கச்**
**சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே**

என்கிறார் மறக்க முடியாத அறிவுரை! அனைவரையும் வாழ வைக்கும் அறிவுரை!

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

உங்கள் சந்தா முடிவடைவதற்கு ஒரு மாதம் முன்பே **'அடுத்த மாதத்துடன் உங்கள் சந்தா முடிகிறது'** என்றும், மீண்டும் அடுத்த மாதம் **'இந்த மாதத்துடன் உங்கள் சந்தா முடிந்துவிட்டது, உடனே புதுப்பியுங்கள்'** என்றும் அறிவிப்பு செய்து வருகிறோம். அப்படியும் குறித்த காலத்தில் சந்தாப் பணத்தைச் செலுத்தாதவர்களுக்கு பத்திரிகையை அனுப்ப இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஆஸ்திகரே!

சென்ற இதழில் ஆண்டுமலருக்காக ரூ. 5 அனுப்பும் வாசகர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதிலிருந்து M O. மூலம் ரூபாய்கள் வந்த வண்ணமிருக்கின்றன டிசம்பர் 15ம் தேதிக்குள் அனுப்ப வேண்டுமென்று கூறியிருந்தோம், ஆனால் வாசக அன்பர்கள் பலர் இந்த அவகாசம் மிகவும் குறைவானது என்றும் ஆண்டு மலருக்கு ரூபாய் அனுப்ப வேண்டிய தேதியை சற்று ஒத்திப் போடுமாறும் எழுதிய வண்ண மிருக்கிறார்கள். நவம்பர் 25ம் தேதிக்கு மேல்தான் சென்ற இதழ் உங்கள் கையில் கிடைத்திருக்கிறது. எனவே அவகாசம் போதவில்லை என்ற உங்கள் கோரிக்கை நியாய மானதே. எனவே ஆண்டு மலருக்காக ரூபாய் அனுப்ப வேண்டிய தேதியை இன்னும் ஒருமாதம் தள்ளிப்போடுகிறோம். அதாவது ஜனவரி 15ம் தேதிக்குள் ரூபாய் 5 அனுப்பிப் பதிவு செய்து கொள்ளுங்கள். (உங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் குறிப்பிடுங்கள்.)

ஆசார்யன் முதல் மூன்று இதழ்கள் கிடைக்காதவர் களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. முதல் மூன்று இதழ்களின் வண்ணப் படங்களையும் நீங்கள் ஆண்டு மலரில் பெறலாம். மேலும் பல புதிய படங்களும் ஆண்டுமலரில் இடம்பெறும். இதைத் தவிர சிறுகதைகள், பேட்டிக் கட்டுரை, கலந்துரை யாடல் போன்ற புதுமையான பகுதிகளும் உண்டு. நமது ஸம்ப்ரதாய வித்வான்களும், பிரபல எழுத்தாளர்களும் எழுதும் சுவையான கட்டுரை, கவிதைகளும் இடம்பெறும்.

உங்கள் பிரதிக்கு உடனே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

---

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.

களா ? ஹைகோர்டில் L. P. அப்பீல் செய்தனர் வடகலையார். இந்த அப்பீல் முடியும்வரை தென்கலைத் திருமண் போடுவதற்குத் தடையும் கேட்டனர். அப்பீல் வழக்கு முடியும் வரையில் ஒருவாரம் தென்கலைத் திருமணும் ஒருவாரம் வடகலைத்திருமணும் போடும்படி இடைக்கால உத்தரவளிக்கப்பட்டது. இப்படி சுமார் இரண்டு வருடகாலம் வடகலைத் திருமணும் தென்கலைத் திருமணும் மாறிமாறிப் பெற்றது.



இவ்வழக்கின் முடிவில் இனி வரதராஜஸ்வாமி கோயில் யானைக்குத் தென்கலைத் திருமணே போட வேண்டும் என்று நிரந்தர தீர்ப்பு வெளிவந்தது. அதன்படி 1972 செப்டம்பர் மாதம் முதல் இந்த யானை நிரந்தரமாக தென்கலைத் திருமணை அணிந்து கொண்டிருந்தது (இதை எதிர்த்து வடகலையார் சுப்ரீம் கோர்டில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.)

இவ்வாறாக வழக்குடனே 1965ல் கோயிலில் நுழைந்த இந்த யானை சில ஆண்டுகள் வடகலைத் திருமணுடனும் பிறகு இரண்டாண்டுகள் ஒருவாரம் வடகலை—ஒருவாரம் தென்கலை என்று இரண்டு திருமண்களுடனும் முடிவில் 1976 செப்டம்பர் முதல் நிரந்தரமாக தென்கலைத் திருமணுடனும் சுமார் 14 ஆண்டுகள் தேவப் பெருமாளுக்குக் கைங்கர்யம் செய்துவிட்டு, 6-12-79 அன்று தேவப்பெருமாள் திருவடியை அடைந்து விட்டது. கூடிய சீக்கிரம் அதன் ஸ்தானத்தில் தேவப் பெருமாள் கைங்கர்யத்தை ஏற்க வேறொரு யானையை பக்தர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.